பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
24 06 2025 12 40
செவ்வாய்க்கிழமை பிற்பகல்

தலைப்புச் செய்திகள்

- நாராயண குரு மற்றும் மகாத்மா காந்தியின் பங்களிப்புகள் நாட்டு மக்களுக்கு முன்மாதிரியாக விளங்குவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- சீனாவின் நடைபெற உள்ள பாதுகாப்பு அமைச்சர்கள் நிலையிலான ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் பங்கேற்கிறார்.
- சேவை, நல்லாட்சி மற்றும் ஏழைகளின் நலன் ஆட்சி நிர்வாகத்தின் முக்கிய தூண்களாக திகழ்வதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
- அமெரிக்கா அறிவித்த போர்நிறுத்தத்தை இஸ்ரேல் ஏற்றுக்கொள்வதாக அந்நாட்டின் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.
- 17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய ஜூனியர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

*<<<<>>>>*

நாராயண குரு மற்றும் மகாத்மா காந்தியின் பங்களிப்புகள் நாட்டு மக்களுக்கு முன்மாதிரியாக விளங்குவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாராயணகுரு மற்றும் மகாத்மா காந்தி இடையிலான வரலாற்றுச் சிறப்பு மிக்க உரையாடலின் நூற்றாண்டு கொண்டாட்ட நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

நூறு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த அவர்களது சந்திப்பு சமூக நல்லிணக்கம் மற்றும் வளர்ச்சியடைந்த இந்தியா எனும் இலக்கை அடைவதற்கான உந்து சக்தியாக திகழ்வதாக கூறினார்.

இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க தருணத்தில் நாராயணகுரு மற்றும் மகாத்மா காந்திக்கு தாம் தலைவணங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

இவர்களது சந்திப்பு சுதந்திரப் போராட்டத்தில் புதிய திசையை ஏற்படுத்தியதோடு, சுதந்திர இந்தியா குறித்த கனவுக்கு புதிய அர்த்தத்தை தந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

உலக நாடுகளின் அமைதி மற்றும் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருவதாகவும், அதன் ஒரு பகுதியாக சர்வதேச யோகா தின நிகழ்ச்சி நடைபெற்றதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் உறுதியான நிலைப்பாடு ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மூலம் உலகிற்கு உணர்த்தப்பட்டதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

<<<<>>>>

சீனாவின் **Qingdao**-வில் நடைபெறும் பாதுகாப்பு அமைச்சர்கள் நிலையிலான ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் பங்கேற்கிறார்.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நாளை தொடங்கி இரண்டு நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பு, தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் உறுப்பு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு குறித்து ஆலோசிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாநாட்டின் இடையே ரஷ்யா மற்றும் சீனா உட்பட சில உறுப்பு நாடுகளின் பாதுகாப்புத்துறை அமைச்சர்களுடன் திரு. ராஜ்நாத் சிங் இருதரப்பு பேச்சு மேற்கொள்ள உள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் உள்ள நாடுகளுக்கு இடையேயான வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெற்கு ஆஸ்திரேலிய ஆளுநர் திரு. **Frances Adamson**-ஐ சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தினார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், கல்வி, விண்வெளித்துறை, வேளாண்மை, எரிசக்தி மற்றும் நீர் பயன்பாடு உட்பட பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்பட உள்ள நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தியதாக தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மத்திய கிழக்கு நாடுகள் தங்களது வான்பரப்பை மூடி வரும் நிலையில் இந்தியாவில் இருந்து புறப்படும் சில விமானங்களின் சேவை ரத்து செய்யப்படுவதாகவும், சில விமானங்கள் மாற்றுப் பாதையில் இயக்கப்படுவதாகவும் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தைப் பதிவு செய்துள்ள அவர், நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், இது தொடர்பான தகவல்கள் விமான நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

பயணிகளின் பாதுகாப்புக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாகவும், சிரமங்களைக் குறைக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு. ராம்மோகன் நாயுடு குறிப்பிட்டுள்ளார்.

கத்தார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பஹ்ரைன் நாடுகளின் வான்பரப்பு மூடப்பட்டுள்ள நிலையில், சென்னையில் அந்நாடுகளுக்கான விமான சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது.

அந்நாடுகளுக்கு பயணம் மேற்கொள்வோர் தாங்கள் பயணிக்கும் விமான நிறுவனங்களைத் தொடர்புகொண்டு பயணம் குறித்த தகவல்களை உறுதி செய்துகொள்ளுமாறும் சென்னை விமான நிலைய நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

ராணுவத்தின் செயல்பாட்டை வலுப்படுத்தும் வகையில் அவசர கால கொள்முதல் வழிமுறையின்கீழ் 13 ஒப்பந்தங்களுக்கு பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதன் மூலமாக எடைகுறைந்த ரேடார்கள், ஒருங்கிணைந்த ட்ரோன் கண்டறியும் அமைப்பு உள்ளிட்ட பாதுகாப்பு தளவாடங்களை ஆயிரத்து 981 கோடி ரூபாய் மதிப்பில் கொள்முதல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ராணுவத்தில் நவீன தளவாடங்களின் பயன்பாட்டை அதிகரிப்பதையும், நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதையும் உள்நாட்டு ராணுவ தளவாட உற்பத்தியை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டு இந்த கொள்முதல் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இஸ்ரேல் நாட்டில் உள்ள 165 இந்தியர்கள் அடங்கிய முதல் குழுவினர் இன்று புதுதில்லி வந்தடைந்தனர்.

சாலை மார்க்கமாக இஸ்ரேலில் இருந்து ஜோர்டானின் அம்மான் சென்றடைந்த இக்குழுவினர், இன்று காலை விமானப்படை விமானம் மூலமாக புதுதில்லி அழைத்து வரப்பட்டனர்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் அவர்களை வரவேற்றார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இந்தியர்கள் பாதுகாப்பாக தாயகம் திரும்புவதற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் கூறினார்.

இதற்கிடையே ஜோர்டான் மற்றும் எகிப்தில் இருந்து மேலும் பல இந்தியர்களை அழைத்து வரும் பணிகளில் விமானப்படை ஈடுபட்டுள்ளது.

<<<<>>>>

சேவை, நல்லாட்சி மற்றும் ஏழைகளின் நலன் ஆகியன ஆட்சி நிர்வாகத்தின் முக்கிய தூண்களாக திகழ்வதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

13வது பாஸ்போர்ட் சேவை தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் பாஸ்போர்ட் வழங்கும் சேவை குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றத்தைக் கண்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதிநவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பாஸ்போர்ட் சேவை செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.

‘பாஸ்போர்ட் போலிஸ்’ செயலி மூலமாக பயனர்கள் குறித்த காவல்துறையினரின் சரிபார்ப்பு காலம் 5 முதல் ஏழு நாட்களாக குறைக்கப்பட்டுள்ளதாக திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் அறிவித்த போர்நிறுத்தத்தை இஸ்ரேல் ஏற்றுக்கொள்வதாக அந்நாட்டின் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த போர்நிறுத்த அறிவிப்பின் மூலமாக ஈரானின் அணு ஆயுதம் மற்றும் ஏவுகணை அச்சுறுத்தல் முடிவுக்கு வந்திருப்பதாக கூறினார்.

ஈரான் அச்சுறுத்தலை அகற்றுவதில் அமெரிக்கா அளித்த பாதுகாப்பு ஒத்துழைப்புக்கு தாம் நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் திரு. நெதன்யாகு குறிப்பிட்டார்.

மேலும் அமெரிக்கா முன்மொழிந்தபடி பரஸ்பர போர்நிறுத்தத்திற்கு இஸ்ரேல் ஒப்புதல் தெரிவிப்பதாக திரு. நெதன்யாகு கூறினார்.

<<<<>>>>

1975 ஆம் ஆண்டு ஜூன் 25 ஆம் தேதி நாட்டில் முதன்முறையாக அவசர நிலை பிரகடனப்படுத்திய தினம் நினைவுகூரப்படுகிறது.

ஜனநாயகத்திற்கு எதிராகவும் இந்திய அரசியல் சாசனத்திற்கு எதிராகவும் பிரகடனப்படுத்தப்பட்ட அவசர நிலை நாட்டில் ஒவ்வொரு குடிமகனையும் கட்டுப்படுத்துவதாக அமைந்தது.

அவசர நிலையின் போது ஒவ்வொரு நாளும் தனிமனித கட்டுப்பாடுகள் அதிகரித்ததுடன் சுதந்திரம் பறிபோனது.

ஜனநாயகத்தின் இருளடைந்த சூழலை நினைவுப்படுத்துவதற்காகவே மத்திய அரசு ஜூன் மாதம் 25 ஆம் தேதியை சம்விதான் ஹாட்டியா தினமாக அறிவிக்கப்பட்டது.

அப்போதைய பிரதமராக இருந்த திருமதி இந்திராகாந்தி சர்வாதிகார மனப்போக்குடன் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி 18 மாதங்கள் அவசர நிலையை பிரகடனம் செய்தார்.

இதனையடுத்து லட்சக்கணக்கானோர் சிறைப்படுத்தப்பட்டனர். ஊடகத்துறையும் முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டது. ஜனநாயகத்தை மீண்டும் நிலைநிறுத்துவதற்காக ஏராளமானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அடக்குமுறை ஆட்சிக்கு எதிராக எண்ணற்ற அச்சுறுத்தல்களையும் சிறைதண்டனையையும் அனுபவித்தனர்.

இந்த நாளை அனுசரிப்பதன் மூலம் தனி மனிதனின் சுதந்திரம் என்றும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், ஜனநாயக சுதந்திரத்தை ஒவ்வொரு இந்தியனும் அனுபவிக்க வேண்டும் என்றும் விரும்பி அரசு இந்த நாளை அறிவித்துள்ளது.

<<<<>>>>

17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய ஜூனியர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றது.

வியட்நாமில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 110 கிலோ எடைப்பிரிவில் **Hardeep** தங்கப்பதக்கத்தையும், 48 கிலோ எடைப்பிரிவில் ஆதித்யா திலீப் ஜாதவ் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர்.

<<<<>>>>

உலகக்கோப்பை பாரா வலுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ஜாந்து குமார் வெண்கலப் பதக்கம் வென்றார்.

பீஜிங்கில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஆடவர் 80 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

<<<<>>>>

சீன தைபேயில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்க முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்யைறர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-3, 6-4 என்ற செட் கணக்கில் ஜப்பானின் லிசாவை வென்றார்.